**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG20 – நிலை II – (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**மே – சூன் 2019**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. கண்ணதாசன் எவ்வாறு போற்றப் பெறுகிறார்?
2. கேடில்லாத செல்வம் எது?
3. கம்பரை ஆதரித்த வள்ளலின் பெயர் என்ன?
4. இரட்டுற மொழிதல் என்பதன் வேறு பெயர் என்ன?
5. பாரதியார் எவ்வாறு அழைக்கப் பெற்றார்?
6. பகுத்தறிவு பகலவன் என்று புகழப் பெற்றவர் யார்?
7. சித்தன்ன வாசலில் உள்ள ஓவியங்களில் பெரியது எது?
8. பாரியும் கபிலரும் கலைவிழாக் காண எங்குச் சென்றனர்?
9. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?
10. விடை எத்தனை வகைப்படும்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. எது மனித வாழ்க்கை ஆகும்?
2. பால்பசுவின் கொம்பு எதனால் செய்யப் பெற்றது?
3. வாழ்க்கையாகிய கடலைக் கடக்க எவை எவை தேவைப்படுகின்றன?
4. இயேசு நாதர் வாழ்வைப் பார்த்து ஒருவன் எவ்வாறு வாழ வேண்டும்?
5. திரு.வி.க. என்ன சங்கம் அமைத்தார்?
6. பெரியாரின் பெற்றோர்கள் யாவர்?
7. மன்னன் பாராட்டும்போது எவற்றைப் பரிசாக அளிப்பான்?
8. இந்திய நாட்டுக்கொடியின் நடுவில் உள்ள சக்கரத்தின் பெயர் என்ன?
9. குகைக் கோயில் என்றால் என்ன?
10. புத்தம் புதிய கைக்குட்டையைப் பாரதி யாருக்காக வீணாக்கினான்?

11. நாட்டுப்புறப் பாடல்கள் எவ்வாறு அழைக்கப் பெறுகின்றன?

12. பகுபதத்தின் முதல் உறுப்பு எது?

13. உயிர்நெடில் மாத்திரை அதிகமாக ஒலித்தால் அதன் பெயர் என்ன?

14. தொழிற்பெயரின் இருநிலைகளைக் கூறுக.

15. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?

## பகுதி – இ

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. இறைவன் காட்சித் தருவதை விவரி?
2. பெருங்காப்பியத்திற்கான உறுதிப் பொருள்கள் யாவை?
3. சிவன் அசுரர்களின் என்னென்னக் கோட்டைகளை அழித்தான்?
4. பெரியாரோடு பழகிய அறிஞர்கள் சிலரைக் குறிப்பிடுக.
5. நாட்குறிப்பில் எத்தகையச் செய்திகளை எழுதலாம்?
6. உழவர் உழவு செய்யாமல் பறம்புமலையில் விளைவன யாவை?
7. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?
8. ஆய்த குறுக்கம் – சான்றுடன் விளக்குக.

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. பாரதிதாசன் பற்றி குறிப்பு வரைக.
2. சித்தன்ன வாசல் பற்றி எழுதுக.
3. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி – உ

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. திருக்குறள் பற்றி எழுதுக.
2. பகுத்தறிவு பகலவனின் தொண்டுப் பற்றி எழுதுக.